**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**EA 65/2014 in EP 4/2013 in RCOP 1/1998**

2026—ம் ஆண்டு ஜுன் மாதம் 10ம் நாள் புதன்கிழமை மனுதாரர் தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3—ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**P.W.1 ஆறுமுகம், வயது 47, த/பெ கிருஷ்ணன்**

**நேரம் - 3.05**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

என் அக்காவின் பெயர் மற்றும் அவர் எந்த வருடம் பிறந்தார் என்றால் எனக்கு தெரியாது, ஆனால் எனக்கு 5 அக்கா உள்ளார்கள். கணேசனின் மனைவி பெயர் என்ன என்றால் வேண்டா மற்றும் அவர் என்னுடைய அக்கா என்றால் சரிதான். 1992ம் வருடம் என் அக்கா வேண்டாவின் வயது என்னவென்றால் எனக்கு தெரியாது. என் அக்கா வேண்டாவிற்கு எப்போது திருமணம் ஆனது? அவருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் திருமணம் ஆன வருடம் எனக்கு தெரியாது, ஆனால் 1 பெண் பிள்ளை உள்ளார். கணேசன் எந்த வருடம் டீ கடையில் இருந்து வெளியேறினார் என்றால் அவர் ஆரம்பத்தில் இருந்தே கடையில் இல்லை, நான்தான் வேலை செய்து வந்தேன்.

2. கணேசன் எனக்கு உறவினர் என்றாலும் அவரும் நானும் பேசிக் கொள்ளாமல் 15 வருடமாக உள்ளோம் என்றால் சரிதான். நான் கணேசனின் ஆலோசனைப்படிதான் இம்மனுவான EA 65/2014 ஐ தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. RCOP 1/1998 என்ற வழக்கை இந்நீதிமன்றம் கணேசனை வெளியேற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது, அந்த சமயம் நான் டீக்கடையில்தான் வேலை பார்த்து வந்தேன் என்றால் சரிதான். RCOP 1/1998 வழக்கில் மற்றும் CRP 2062/2004 என்ற வழக்கிலும் கணேசனை வெளியேற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது, மேற்படி உத்தரவுகளை தெரிந்து கொண்டு நான் தற்போது மேற்படி பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது, நான் தனியாக வசித்து வருகிறேன்.

3. மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவான கணேசனை ஆறு மாத காலத்திற்குள் வெளியேற வேண்டும் என்று உத்தரவிட்டும், மேற்படி உத்தரவை மதிக்காமல் கணேசன் என்னை இம்மனுவான EA 65/2014 வை தாக்கல் செய்ய வைத்து இந்நீதிமன்றத்தை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் போடப்பட்ட மனு என்றால் சரியல்ல. நான் சாதாரண டீக்கடை வைத்திருந்த நிலையில் 13 குமாஸ்தாக்களை பணியில் வைத்திருந்தேன் என்பதற்கான வருகை பதிவேடு மற்றும் சம்பள பட்டுவாடா பதிவேடுகளை வைத்துள்ளேனா என்றாலும், அவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் குமாஸ்தாக்களுக்கு கொடுக்கும் சம்பளத்திற்கு நான் எந்த பதிவேட்டையும் பராமரிக்கவில்லை.

4. நான் 13 குமாஸ்தாக்களை பணியில் வைத்திருந்தேன் என்று சொல்வது நீதிமன்றத்தின் அனுதாபத்தை பெற வேண்டும் என்பதற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சிண்டிகேட் வங்கியிலிருந்து ரூபாய் 2 லட்சம் கடன் பெற்று கடையை புதுப்பித்தேன் என்பதற்கு ஏதேனும் ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. நான் என் சொந்த செலவிற்காகதான் மேற்படி 2 லட்சத்தை கடன் பெற்றேன் என்றாலும், நான் நீதிமன்றத்தை திசை திருப்ப மேற்படி டீக்கடையை புதுப்பிக்க கடன் பெற்றதாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. எனக்கு 1998ம் ஆண்டு நடந்த திருமணத்தை 2013ம் ஆண்டு போடப்பட்ட EP 4/2013 என்ற வழக்கை திசை திருப்ப வேண்டும் என்பதற்காகவும், என்னை அச்சுறுத்தினார்கள் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2005 முதல் 2013 வரையான பதிவு சான்றுகளை எனக்கு அதிகாரிகள் தரவில்லை என்று சொல்வது முற்றிலும் தவறு என்றாலும், நீதிமன்றத்தை வழி மாற்ற செய்ய பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1992ம் வருடத்திலிருந்து நான்தான் டீக்கடையை நடத்தி வந்தேன் என்பதற்கான எந்த ஆவணமும் என்னிடம் இல்லை என்பதால் 2005 முதல் 2012 வரையான பதிவு சான்றுகள் மற்றும் இதர ஆவணங்களை அதிகாரிகள் தரவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. இந்நீதிமன்றத்திலிருந்து வழக்கறிஞர் ஆணையர் நியமிக்கப்பட்டு அவர் மனு சொத்தை பார்வையிட்ட போது 143A என்று குறிப்பிட்டுள்ள நிலையில் 143A இல்லை என்று

நான் இந்நீதிமன்றத்தில் வாதிட்டேன் என்றால் சரியல்ல, என்னுடைய கடையின் எண்.143A தான் ஆகும். டீக்கடை உரிமையாளரான பவுனம்மாள் என் மீது எந்த வழக்கையும் தொடராமல் கணேசன் மீதுதான் வழக்கை தொடர்ந்தார் என்றால் சரிதான். அதன் பின்னிட்டு பவுனம்மாள் இறந்த பிறகு அவர் வாரிசுதாரர்களும் கணேசன் மீதுதான் வழக்கை தொடர்ந்துள்ளார்கள் என்றாலும் என்னை ஒரு போதும் வாடகைதாரராக ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் சரிதான், ஆனால் அது கூட்டு சதியாகும்.

7. ஒரே சொத்தில் இருவர் வாடகைதாரர் என்ற உரிமையை கோர முடியாது என்றாலும், அதுதான் சட்டம் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். பவுனம்மாளின் வாரிசுதாரர்களிடமிருந்து சொத்தை காப்பாற்றி கொள்ள வேண்டும் என்பதற்காகதான் நானும் கணேசனும் கூட்டு சதி செய்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. உண்மையில் இந்நீதிமன்றத்தில் இருந்து அமீனா மனு சொத்து இடத்திற்கு சென்று என்னை வெளியேற்ற கூடாது என்பதற்காகதான் நான் இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது.**

**நேரம் 3.35**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,
Arni